**இராம கோபாலன்**

*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

24-4-2013

**இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர்**
**இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!**
**சீனாவின் ஆக்கிரமிப்பிற்கு மத்திய அரசின் மெத்தனபோக்கே காரணம்**

சீனா பாரதத்தின் லடாக் பகுதியில் நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளது கண்டிக்கத்தக்கது. பாரதத்தின் ஒரு மாநிலமான அருணாசலப்பிரதேசத்தை தன்னுடையது என்று நீண்ட காலமாகச் சொந்தம்கொண்டாடி வருகிறது. அவ்வப்போது அருணாசலப்பிரதேசம் சம்மந்தமாக நமது கண்டனத்தை மத்திய அரசு தெரிவித்தாலும் சீனா தொடர்ந்து வாலாட்டி வருகிறது. அதுபோல பாகிஸ்தானுக்கு ஆதரவாக காஷ்மீர் பகுதியை பாகிஸ்தானுடன் இணைத்து உலக வரைபடத்தை வெளியிட்டதையும் நாம் மறந்திருக்க முடியாது!

நமது அண்டை நாடுகளான நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளுக்கு இராணுவ ஆயுதங்கள் விற்பனை, இராணுவ உதவி வழங்கி பாரதத்திற்கு எதிராக அந்நாடுகளைத் தூண்டியும் வருகிறது.

நேபாள் வழியாக பாரதத்திற்குள் மாவோஸ்ட் பயங்கரவாதிகள் நுழையவும், மேலும் இங்குள்ள இடதுசாரி (கம்யூனிஸ) பயங்கரவாதிகளுக்கு ஆயுதம் மற்றும் நிதி உதவிகளும் வழங்கியும், பயிற்சி அளித்தும் நமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சீனா சதி செய்துவந்துள்ளது.

நமது மத்திய அரசின் குழப்பமான வெளியுறவு கொள்கை நமது நாட்டின் கௌரவத்தைப் படுபாதாளத்தில் கொண்டு சென்றுள்ளது. இதனால் நம்முடன் இணக்கமான உறவுடன் இருந்த இலங்கை, நேபாளம் போன்ற நாடுகள் கூட சீனாவின் கைப்பாவைகளாக மாறிவிட்டன.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியில் சீனா இராணுவ மையம் அமைக்கவும், இலங்கையின் உதவியோடு அங்கும் இராணுவ மையம் அமைக்கும் முயற்சியில் சீனா இருப்பது நமது நாட்டிற்கு நல்லதல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

சீனாவின் மலிவு குப்பை பொருட்கள் பாரதத்தின் பொருளாதாரத்திற்கும், மக்களின் ஆரோக்கியத்திற்கும் கெடுவிளைவித்து வருகிறது. அவற்றையும் மத்திய அரசு தடை செய்ய வேண்டும்.

தெற்கு ஆசியாவில் அமைதி நிலவ சீனாவின் கொட்டம் அடக்கப்பட வேண்டும். மத்திய அரசு விரைந்து செயல்பட்டு நமது நாட்டின் இறையாண்மையை காக்க வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்